DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII - CODE OF ORIGINAL PROCEDURE)
IN THE COURT OF ASSISTANT SESSIONS , DHARAPURAM
**Sessions Case No. 177/2023**

**(Preliminary Register.No.6/2023 )**
Deposition of Witness **அ.சா. 4 ன் வாக்குமூலம்**

Prosecution Witness No.4

| | | | |
|---|---|---|---|
| NAME: | மனோஜ் | FATHER'S NAME: | சுப்பிரமணி |
| VILLAGE: | தாராபுரம் | TALUK: | தாராபுரம் |
| CASTE: | | CALLING: | பெயிண்டர் |
| RELIGION: | இந்து | AGE: | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 21.07.2025.
3 எதிரி ஆஜர். 1ம் எதிரி தரப்பில் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. 2ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞரும் ஆஜரில் இல்லை.

**<u>முதல் விசாரணை</u>** :–

நான் தாராபுரம் காமராஜபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்னால் சாட்சி அ.சா.3 ஐ எனக்கு தெரியும். அவர் பாலசுப்பிரமணியம் நகரில் உள்ள டாஸ்மாக் கடையில் விற்பனையாளராக பணிசெய்து வருகிறார். அவர் எனக்கு 26.01.2021ம் தேதி அதிகாலை 1.00 மணிக்கு போன் செய்து என்னுடன் பணியாற்றும் சேல்ஸ்மேன் சிவக்குமார் டாஸ்மாக் கடையை மூடிவிட்டு வரும்போது 3 பேர் வழிமறித்து அடித்து பணத்தை பறித்துவிட்டு சென்றதாக கூறினார். அதன் பின்பு என்னை தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு வரச்சொன்னார். அங்கு சென்றபோது நானும் சுரேஷ், சென்னியப்பன் ஆகிய மூவரும் அடிபட்ட சிவக்குமாரை பார்த்து விசாரித்தோம். பின்பு சுரேஷ்குமார் சம்மவ இடத்திற்கு செல்லலாம் என்றார். பின்பு, நானும் சுரேஷ், சென்னியப்பன் ஆகிய மூவரும் சம்பவ இடத்திற்கு அதிகாலை 3.00 மணிக்கு சென்றோம். அந்த இடத்திற்கு போலீசார் வந்தார்கள். சம்பவ இடத்தில் சாட்சியாக இருக்க சொன்னார்கள். பின்பு, காவலர்கள் ஜீப் வெளிச்சத்திலும் டார்ச்லைட் வெளிச்சத்திலும் சம்பவ இடத்தை வரைபடம் வரைந்தார்கள். பின்பு, அதை விவரித்து எழுதிக்கொண்டார்கள். பின்பு என்னிடமும் சென்னியப்பனிடமும் கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆகும். அதன் பின்னிட்டு, ரோட்டில் 1848 என்ற பாட்டிலில் கருப்பு நிற முகப்புடன் கூடிய மூடி இரண்டு, உடைந்த கண்ணாடி பாட்டில் துண்டு 3, ஆகியவற்றை காவலர்கள் கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கையொப்பம் பெற்றார்கள். அதில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.3 ஆகும். இது சம்மந்தமாக போலீசார் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள்.

**<u>1, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.3 சுரேஷ் என்னுடைய உறவினர். பட்டியல் சாட்சி சென்னியப்பனும் எனது உறவினர். சம்பவம் நடத்தை இடத்தை போலீசாருக்கு அடையாளம் காட்டியது யார் என்றால் மேற்பார்வையாளர் அ.சா.1

குணசேகரன் அடையாளம் காட்டினார். நான் சென்றபின்பு தான் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தனர். 3 போலீசார், மற்றும் குணசேகரன், சுரேஷ், சென்னியப்பன், நானும் சம்பவ இடத்தில் இருந்தோம். பொதுவாக சம்பவம் நடந்த இடத்தில் ஆங்காங்கே மதுபாட்டில்களை உடைத்து போட்டிருப்பார்கள் என்றால் இல்லை. என் முன்பு வரைந்த வரைபடங்கள் போலீசாரே வரைந்தார்கள். அங்கு உள்ளவர்களை கேட்டு வரைந்தார்களா என்றால் இல்லை. அந்த பகுதியை சேர்ந்தவர்களை போலீசார் விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் இருக்கும்போது விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் படம் வரைந்த பேப்பரில் கையெழுத்து செய்யவில்லை. அடுத்த பக்கத்தில் எழுதியுள்ள பகுதியில்தான் கையெழுத்து செய்தேன். அதில் எழுதியுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது என்று சாட்சி பதில் சொல்லிவிட்டு அங்கு கண்டவைகள் சம்மந்தமாக இருந்தது என்றார். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவ இடம் செல்லவும் இல்லை என்றும், என் முன்னால் பார்வை மகஜரோ, கைப்பற்றுதல் மகஜரோ தயார் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.3 உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் காவல்நிலையத்தில் வைத்து மகஜரில் கையெழுத்து செய்துவிட்டு, தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஒப்பம்.கு.சக்திவேல்)
சார்பு நீதிபதி
தாராபுரம்.